## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 142/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செல்லம்மாள் | நாள் | 07.09.2023 |
| கணவர் பெயர் | சுப்ரமணியம் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

34) என் மகளுக்கு நான் அளித்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நகராட்சிக்கு காட்டிதான் என் பெயரிலுள்ள வரிகளை என் மகள் பெயருக்கு மாற்றினார்கள் என்றால், சரிதான்.

35) 40 ஆண்டுகளுக்கு முன்பு நான் ஆக்கிரமிப்பு செய்த நிலப்பகுதி மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள தார்சு வீடு ஆகிய அனைத்தையும் சேர்த்து தானசெட்டில்மெண்ட் பெயரில் என் மகளின் பெயருக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால், சரிதான்.

36) என் மகளின் பெயருக்கு, நான் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் பின்னிட்டு எப்போதேனும் ரத்து செய்துள்ளேனா என்றால், இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு என் பெயரில் பட்டா பெறுவதற்காக என் மகளின் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தேன். தேதி எனக்கு சரியாக நினைவில்லை.

37) அவ்வாறு மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் ரத்து செய்த பிறகு என் மகளின் பெயருக்கு நகராட்சியால் விதிக்கப்பட்டு வந்த வரி ரசீதுகளை ரத்து செய்ய கோரி ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால், இல்லை. என் மகளின் பெயரில் தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தது குறித்தோ, பின்னிட்டு அவர் பெயரில் நகராட்சியில் வரி மாற்றம் செய்தது குறித்தோ நான் என் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை.

38) இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு என் மகளின் பெயரிலுள்ள தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை நான் ரத்து செய்தேன் என்றால், வருடம் சரியாக நினைவில்லை.

39) பிரச்சனைகுரிய 2 அடி சந்தில் பிரதிவாதி ஓட்டை அடுக்கி இடையூறு செய்ததாக நான் சொல்லியுள்ள நிலையில் அது குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால், மேற்படி 2 அடிசந்தில் புது பைப் லைன் போட பிரதிவாதி இடையூறு செய்கிறார் என நான் காவல் நிலையத்தில் சென்று புகார் அளித்தேன். போலீசார் என்னை நீதிமன்றத்தை அணுக சொல்லி கூறினார்கள். அவ்வாறு புகார் அளித்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

40) அவ்வாறு பிரதிவாதி மேற்படி 2 அடி சந்தில் ஓடுகளை வைத்து ஆக்கிரமிப்பு செய்து அடைத்தது குறித்து காவல்நிலையத்தில் என் மகள் ஏதேனும் புகார் அளித்துள்ளாரா என்றால், அளித்துள்ளார். ஆனால், காவலர்கள் அழைத்து விசாரித்தார்கள். ரசீது எதையும் வழங்கவில்லை. எந்த தேதியில், எந்த வருடத்தில் புகார் அளித்தோம் என சொல்ல இயலுமா என்றால், தேதி, வருடம் சரியாக நினைவில்லை.

41) நான் சொல்வது போல் பிரதிவாதி மேற்படி 2 அடி சந்தை ஓடுகளை வைத்து அடைத்ததாகவும், அது தொடர்பாக நாங்கள் போலீசில் புகார் கொடுத்ததாகவும் கூறுவது தவறானது என்றாலும், கடந்த 1987ம் வருடத்திலிருந்து பிரதிவாதி தாவா சந்தை பயன்படுத்தி வருகிறார் என்றாலும், சரியல்ல.

42) பிரதிவாதி தென்புறமுள்ள சுவற்றை அகற்றிவிட்டு தன் வீட்டை விரிவாக்கம் செய்ய வேண்டி, மேற்படி 2 அடி சந்தில் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் நான் அமைத்திருந்த குடிநீர் குழாய்களை அகற்றும் படி என்னிடம் கேட்டதற்கு நான்தான் மறுத்து தகராறு செய்து வந்தேன் என்றால், சரியல்ல.

43) மேற்படி நிலத்தை அபகரிக்கும் எண்ணத்தில் நான் காவல்நிலையத்தில் பொய் புகார் கொடுத்த போது போலீசார் இடத்தை பார்வையிட்டு மேற்படி 2 அடி சந்து பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்ததை தெரிந்து கொண்டு என் புகாரை நிராகரித்து விட்டனர் என்றால், சரியல்ல.

44) தாவா சொத்தான 2X15 அடி சந்து முழுவதும் பிரதிவாதிக்கே பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. அவ்வாறு உண்மையில் எனக்கு பாத்தியப்பட்டிருந்தால் என் மகளுக்கு நான் அளித்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்திலேயே அதுகுறித்து சொல்லியிருப்பேன் என்றால், சரியல்ல.

45) மேற்படி சந்து 2 அடி அகலம், 25 அடி அகலம் உள்ளது. மேற்படி சந்தை நான் இதுவரையில் சர்வேயரை வைத்து அளந்து பார்த்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி சொத்து என்னுடையது இல்லை என்பதால்தான் நான் இதுவரை அதை அளந்து பார்க்கவில்லை என்பதாலும், அது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றாலும், அதன் அளவு குறித்து எனக்கு தெரியவில்லை என்றாலும், சரியல்ல.

46) தாவா சந்தை ஒட்டியுள்ள என்னுடைய நிலத்தை நான் என் மகளுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்து விட்ட நிலையில், மேற்படி சொத்து குறித்து என் மகளுக்கு தான் உரிமை உள்ளது என்றாலும், நான் மேற்படி சொத்தை குறித்தோ, அதன் வசதியுரிமைகள் குறித்தோ வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றாலும், சரியல்ல.

47) என் வீட்டில் இருந்து கழிவு நீர் வெறியேறுவதற்கு என் வீட்டை ஒட்டியே கிழக்கு புறமாக சீனிவாசன் மற்றும் ரத்னா ஆகியோரின் வீட்டிற்கு முன்பாக கிழமேலாக செல்லும் நகராட்சி கால்வாய் உள்ளது என்றாலும், அதைதான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றாலும், அதை அபகரிக்கவே தற்போது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

48) மேற்படி 2 அடி அகல சந்தில் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் தான் நான் குடிநீர் குழாய் அமைத்திருந்தேன் என்றாலும், தற்போது மேற்படி நிலம் பிரதிவாதிக்கு தேவைப்படுகிறது என்பதால்தான் அவர் மேற்படி குடிநீர் குழாய்களை அகற்ற கோருகிறார் என்றாலும், சரியல்ல.

49) என் வீட்டை ஒட்டி வடக்கு புறம் உள்ள நிலப்பகுதி வழியாகவும், அதிலுள்ள

காம்பவுண்ட் வழியாகவும் செல்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும், சரிதான். அவ்வாறு உள்ள நிலையில் நான் மேற்படி வடக்குபுற காம்பவுண்ட் சுவற்றை உடைத்திருந்தால் தவறானது என்றால், சரியல்ல.

(பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.